ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் ஆவடி மாநகராட்சி அரசு பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடங்கள் அமைத்தல் மற்றும் தார் சாலை உள்ளிட்ட பணிகளை திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் க.தர்ப்பகராஜ், மண்டல குழுத் தலைவர்கள் ராஜேந்திரன், அமுதா சேகர், ஜோதி லட்சுமி, மாநகர பொறுப்பாளர் சண்.பிரகாஷ் , பகுதிச் செயலாளர்கள் பேபிசேகர்,ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன் உள்பட அரசு அதிகாரிகள், கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் உள்பட பலர் உள்ளனர்.

மக்கள் நலத்திட்டங்களில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழும்

தி.மு.க. அரசின் சாதனைப் பயணங்கள் தொடரட்டும்!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மே 26

மக்கள் நலத்திட்டங்களில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழும் தி.மு.க. அரசின் சாதனை பயணங்கள் மென்மேலும் தொடரட்டும் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 25.5.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

2021, மே 7ம் தேதி தமிழ்நாடு முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதும், 5 முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டார். அதில் ஒன்று, அரசு நகர பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம். பெண்களிடம் பெரும் வரவேற்பை பெற்ற இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பத்திலும் மாதம் ஆயிரம் ரூபாய் வரை மிச்சமாவதாக ஆய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தினகரன்

மே 25, 2023 வியாழக்கிழமை

பயணங்கள் தொடரட்டும்

2021, மே 7ம் தேதி தமிழ்நாடு முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதும், 5 முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டார். அதில் ஒன்று, அரசு நகர பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம். பெண்களிடம் பெரும் வரவேற்பை பெற்ற இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பத்திலும் மாதம் ஆயிரம் ரூபாய் வரை மிச்சமாவதாக ஆய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாள் ஒன்றுக்கு சுமார் 39 லட்சம் பெண்கள் நகரப் பேருந்துகளில் இலவசமாக பயணிக்கின்றனர். இதுவரை சுமார் 200 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அரசு போக்குவரத்துத்துறை தரும் தகவல் ஆச்சரியமளிக்கிறது. கூலித்தொழிலுக்காக வெளியூருக்கு செல்லும் பெண்கள், பயணங்களில் மட்டுமே பெருந்தொகையை செலவிட்டு வந்தனர். தற்போது அந்த தொகை பெருமளவில் மிச்சப்படுகிறது. அதுமட்டுமின்றி கூடுதலான இடங்களுக்கும் சென்றும் பணியாற்றி வருகின்றனர். இதனால் தங்களது குடும்பத்தேவைகளை சிரமமின்றி எதிர்கொள்கின்றனர்.

திராவிட மாடல் அரசு அனைவருக்குமான அரசு என்பதற்கு இதுபோன்ற திட்டங்களே சாட்சியங்களாக நிற்கின்றன. சமீபத்தில் பொறுப்பேற்ற கர்நாடக காங்கிரஸ் அரசும் அம்மாநிலத்தில் பெண்களுக்கு இலவச பயணத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கு இலவச பஸ் பயண திட்டத்தை தொடர்ந்து, தமிழ்நாடு அரசு மற்றொரு அறிவிப்பை வெளியிட்டு மக்களின் மனதை மகிழ வைத்துள்ளது. அதாவது, தமிழ்நாடு அரசு பேருந்துகளில் பயணிக்கும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இனி கட்டணம் இல்லை என்ற அரசாணையை நேற்று வெளியிட்டுள்ளது. அரசாணையில், அரசு பேருந்துகளில் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு கட்டணமில்லை. மாவட்ட விரைவு பேருந்துகளில் 3 வயது முதல் 12 வயது வரையிலான சிறுவர்களுக்கான அரை டிக்கெட் அனுமதி என்பது தற்போது 5 வயது முதல் 12 வயதாக உயர்த்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

ஏற்கனவே, அரசு பேருந்துகளில் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படாமல் இருந்தது. 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் இலவச பாஸ் மூலம் பயணித்து வருகின்றனர். புதிய அரசாணை மூலம் குடும்பத்தினர் மேலும் பயன் பெறுவர். குடும்ப சேமிப்பு மேலும் பெருகும். மக்களின் நலன் கருதி ஒவ்வொரு திட்டங்களையும், அறிவிப்பையும் செய்து வருவதில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது திராவிட மாடல் அரசு.

மாநிலத்தின் பொருளாதாரத்தை உயர்த்தும் நடவடிக்கையாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்நிய முதலீடுகளை ஈர்க்க வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டு வருகிறார். கடந்தாண்டு ஐக்கிய அரபு நாடுகளுக்கு சென்று வந்தவர், தற்போது சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். பல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை மற்றும் அடுத்தாண்டு ஜனவரியில் சென்னையில் நடக்க உள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுப்பதற்காகவும் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இதன் மூலம் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் அதிகரிக்கும். வேலைவாய்ப்புகளும் பெருகும். ஏற்கனவே போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் பல லட்சம் பேர் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு பெறும் சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு மக்களின் பயண நலன் மற்றும் அவர்களின் எதிர்கால வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் தி.மு.க. அரசின் சாதனை பயணங்கள் மென்மேலும் தொடரட்டும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

சுண்ணாம்புகுளம் ஊராட்சியில் தீ விபத்தால்

பாதிக்கப்பட்ட 2 வீடுகளுக்கு நிவாரண உதவிகள்!

டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவள்ளூர், மே 26 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம், சுண்ணாம்புகுளம் ஊராட்சியில் இரண்டு வீடுகள் தீ விபத்தினால் முற்றிலும் எரிந்தன. தகவல் அறிந்தவுடன் வீடு இழந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பொருட்களை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார்.

இதில் மேற்கு ஒன்றிய செயலாளர் மு.மணி பாலன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், எஸ்.ராம ஜெயம், இரா.அறிவழகன், வெற்றி (எ) ராஜேஷ்,

மு.பாஸ்கர், சுகு, எம். கேசவன், தியாகு, கே.வி. நாகராஜ், கே.வி.ரவி, சுண்ணாம்புகுளம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ். எம். ரவி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட மாடல் அரசின் 2 ஆண்டுகள் சாதனைகளை விளக்கி

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் தெருமுனை கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இளைஞர் அணி சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையான திராவிட மாடல் அரசின் 2 ஆண்டுகள் சாதனைகளை விளக்கி தெருமுனை கூட்டம்கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும் விவரம்:

நாள் : இன்று (26.05.2023) / நேரம் : மாலை 5 மணியளவில்

பகுதி	தலைமை	பேச்சாளர்கள்	இடம்
ஆவடி மேற்கு பகுதி	பொன்.விஜயன்	மதிவதனி	முத்தாபுதுபேட்டை
ஆவடி தெற்கு பகுதி	ஜி.ராஜேந்திரன்	ஆர்.ஜெயசீலன்	ஆவடி மார்கெட்
திருவள்ளூர் கிழக்கு	சே.பிரேம் ஆனந்த்	குடியாத்தம் குமரன்	நத்தமேடு ஊராட்சி
எல்லாபுரம் மத்திய ஒன்றியம்	தங்கம் முரளி	மதிவதனி	கொடுவள்ளி

எனவே மேற்குறிப்பிட்டுள்ள தெருமுனை கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி. ஒன்றிய நகர பகுதி கழக செயலாளர்கள் ஒத்துழைப்புடன் அந்தந்த பகுதி. ஒன்றிய கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஏற்பாடுசெய்கிறார்கள், இக்கூட்டங்களில் அந்தந்த பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், இளைஞர் அணி. மாணவர் அணி, மாளிர்அணிமற்றும்அனைத்து அணிகளின்நிர்வாகிகள் அனைவருக்கும். தகவல் தந்து அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பாக செய்து நடத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆவடி சா.மு.நாசர்,
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பாக கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் பழைய பல்லாவரம் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி, தலைமைக் கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக், மாவட்ட மாணவர் அணி பிரபு, நகர இளைஞரணி அமைப்பாளர் வி. என். சிலம்பரசன், நகர மாணவர் அமைப்பாளர் ஜே .பிரசன்னா, ஜி. நரேஷ் பாபு, கோ. ஜானகிராமன், ஜி. கார்த்திக், டி. எஸ். பிரான்சிஸ், பால் எம். பிரகாஷ் ஆகியோர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அதிகாரம் இல்லாத ஆளுநர்கள்

அதிகாரப்போக்கோடு செயல்படுவதற்கு கடிவாளம் போட்ட உச்சநீதி மன்றத் தீர்ப்பு!

இந்திய நாட்டில் ஜனநாயகம் என்பது மக்களாட்சி தத்துவத்திற்கு உட்பட்டதாகும். ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஆட்சியின் அதிகாரம் என்பது தான் சட்டமன்றம். அதாவது சட்டம் இயற்றுவதற்கு அமைக்கப்பட்ட மன்றம்தான் சட்டமன்றம்.

மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சூழ்நிலைக்கேற்ப மக்கள் பாதிக்காதவாறு அவர்களின் பாதுகாப்புக்கும் அவர்களின் உரிமையை நிலைநாட்டுவதற்கும் ஒட்டுமொத்த சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரு மனதாக ஏகோபித்த ஆதரவோடு நிறைவேற்றுகிற சட்டமுன் வடிவில் கையொப்பமிட்டு ஒப்புதல் கொடுத்து சட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கிற பண்பாடுதான் செயல்பாடுதான் மாநில ஆளுநர்களின் கடமையாகும்.

சுதந்திர இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் ஆளுநர்களாக நியமிக்கப்படுபவர்கள் நன்கு படித்த வல்லுநர்கள் பொருளாதார நிபுணர்கள் இந்திய நாட்டின் இறையாண்மையை காக்கின்ற பண்பாடுமிக்கவர்கள் மக்களை மதிக்கின்றவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு இருக்க வேண்டும் என இந்திய அரசியல் அமைப்பு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

அதை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்து மக்களாட்சி மகத்துவத்தை கட்டி காப்பாற்றுகின்ற பண்பாடு மிக்கவர்கள் ஆளுநர்கள் நாடுமுழுவதும் இருந்து செயல்பட்டு வந்தார்கள். தற்பொழுது 2014 இல் பி.ஜே.பி. ஒன்றிய அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து மாநில அரசுகளில் இவர்களுடைய பி.ஜே.பி. ஆளுகிற மாநிலங்களைத் தவிர எதிர்க்கட்சிகள் ஆளுகிற மாநிலங்களில் அந்த ஆட்சிக்கு இடையூறு விளைவிக்கின்ற விதத்தில் அந்த ஆட்சியை செயல்படவிடாமல் சட்டமன்ற அதிகாரத்தையும் என்னவென்று புரிந்து கொண்டு செயல்படாமல் மக்களாட்சி தத்துவத்தை புறக்கணித்து இந்திய அரசியலமைப்பு சட்டத்தையும் புறக்கணித்து கடுமையான எதிர் நிலைப்பாட்டில் மாநில அரசுகளுக்கு எதிராக ஆளுநர்கள் மூலம் இரட்டை ஆட்சி முறையை செயல்படுத்தி வருகிறது ஒன்றிய அரசு. அவர்களுடைய ஆதரவாளர்கள்.

ஆர்.எஸ்.எஸ்.சினுடைய தலைவர்கள் . இந்திய அரசுப் பணியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பி.ஜே.பி.யின் ஆதரவாளர்கள் இப்படிப்பட்டவர்களை ஆளுநர்களாக நியமித்து இந்த எட்டு ஆண்டுகளுக்கு மேல் இந்தியா முழுவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு விரோதமாக தொடர்ந்து தவறான போக்கை கையாண்டு செயல்படுவதை மக்கள் முழுமையாக எதிர்க்கிறார்கள் கண்டிக்கிறார்கள் .

பி.ஜே.பி. ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு விரோதமான செயலால் தொல்லை கொடுக்கிறது ஒன்றிய அரசுக்கு எப்படி மக்கள் வாக்களித்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி நடத்துகிறார்களோ அது போல் மாநில அரசுகளுக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு இடையூறு விளைவிக்கின்ற செயல்பாடுகளை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

கோவை கே.செல்வராஜ்
கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர்

இந்த நிலைப்பாட்டில் தான் ஆளுநர்களின் தவறான அணுகுமுறை. நடைமுறை . செயல்பாடு . பண்பாடு இல்லாத ஒரு பொறுப்பில்லாத செயல்பாடுகளை தெரியப்படுத்தி சட்டமன்ற வரலாற்றில் இதுவரை நடைபெறாத சில செயல்களை தமிழ்நாடு, தெலுங்கானா, மேற்கு வங்காளம் ,புதுடெல்லி, பாண்டிச்சேரி, பீகார் , ஒரிசா , ராஜஸ்தான் , மகாராஷ்டிரா ,பஞ்சாப் போன்ற மாநிலங்களின் ஆளுநர்கள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதை செயல்படுத்துகிற அறிவிக்கப்படாத அதிகாரம் பெற்றவர்கள் போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு என்பது சிறப்பாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது சட்ட ஒழுங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. மக்கள் பாதுகாப்போடு இருக்கிறார்கள். எந்த சூழ்நிலையிலும் தமிழகத்தில் எந்த விதமான அச்சமும் பயமும் இல்லாமல் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆளுநர் சட்டம் ஒழுங்கை பற்றி குறைகூறுகிறார்.

ஜாதியின் பேரால் , மதத்தின் பெயரால் , மொழியின் பெயரால் எங்காவது கலவரங்களும் சண்டைகள் ஏற்பட்டால் அதை அடக்க முடியவில்லை என்றால் அது தான் சட்ட ஒழுங்கு செயல் நிலைப்பாடு தமிழகத்தில் இல்லை.எனகூறலாம் ஆனால் ஆளுநர் அரசியல் எதிர்க்கட்சித் தலைவர் போல் பேசுவதை மக்கள் கண்டிக்கிறார்கள். அங்கொன்று இங்கொன்றுமாக எங்காவது தனிப்பட்ட வர்களுடைய பிரச்சினையாக இருந்தாலும் கூட அதை முழுமையாக உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து அந்த குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டிக்கிற நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அற்புதமான ஆட்சியை கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

பி.ஜே.பி. உடைய ஆட்சி நடக்கும் மாநிலங்களில் பிரம்மாண்டமான கலவரங்கள் எங்கு பார்த்தாலும் மக்கள் நடமாட முடியாத ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கிற சூழ்நிலையில் செயல்படுகிற நிலைப்பாடுகள் வட மாநிலங்களில் எத்தனை நடக்கிறது இதையெல்லாம் பார்த்துவிட்டு தமிழக அரசின் அற்புதமான செயல்பாட்டை பார்த்து மீண்டும் எந்த தேர்தல் வந்தாலும் தி.மு.க.வை பி.ஜே.பி.யால் வெற்றிபெற முடியாது என்கிற நிலைப்பாடு இருப்பதால் ஒட்டுமொத்த மக்களின் ஆதரவும் இருப்பதால் அதை பார்த்து சகித்துக் கொள்ள முடியாமல் ஆளுநர் தனது எஜமானர்கள்நினைக்கிற பி.ஜே.பி. தமிழ்நாட்டில் எப்படியாவது வரவேண்டும் என்று நினைக்கிறார்.

அந்த பகல் கனவு ஒரு நாளும் நிறைவேறாது . நம்முடைய மாநில கவர்னர் அரசியல் செய்ய பார்க்கிறார் அது இனிமேல் எடுபடாது புதுடெல்லி மாநில அரசின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் அரசில் தலைமைச் செயலாளர் உட்பட எல்லா துறையின் செயலாளர்களையும் நியமிப்பதற்கு இடையூறாக அந்த மாநில ஆளுநர் அவர் இஸ்டம் போல் அவரே அதிகாரிகள் நியமிப்பது சட்டமன்றத்தினுடைய ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு செல்வதில்லை வரவு செலவு பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு அனுமதி கொடுப்பதில்லை சாதாரண ஒரு அதிகாரியிடம் இருந்து செயலாளர்கள் வரை யாரையும் நியமிப்பதற்கு பணியிடம் மாற்றுவதற்கு ஒப்புதல் கொடுப்பதும் இல்லை அவர் எந்தச் சூழலில் எதற்கும் ஒத்துப் போவதுமில்லை அந்த ஆளுநர் ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்குற பொழுது அரசு அனுப்புகிற கோப்புகளை கையெழுத்திட்டு அனுப்புவதும் இல்லை முழுமையான இடையூறு தொடர்ந்து பலமுறை முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு சொல்லியும் அவர்களும் அதை கேட்பதில்லை ஆளுநரும் ஒத்துழைப்பதில்லை சில நேரங்களில் ஆளுநர் உடைய அலுவலகத்தில் உள்புறமாக அமர்ந்து உண்ணாவிரதம் முதலமைச்சர் அவர்கள் அமர்ந்த பிறகு ஆளுநர் ராஜனாமா செய்து விட்டு சென்று விட்டார்.

ஒன்றிய அரசு அரசு அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுப்பதும் மாநில அரசுக்கு எதிராக செயல்பட வைப்பதும் தொடர்ந்து புதுடெல்லியில் நடந்து வந்தது இரண்டு நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 2019 தீர்ப்பில் துணை நிலை ஆளுநர் மூலம் ஒன்றிய அரசு காவல்துறை இந்தியாவின் தலைநகரம் புதுடெல்லி என்பதால் துணைநிலை ஆளுநர்கள் மூலம் அவர் செயல்படுவது ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் என்கிற விதத்தில் மாநில அரசுக்கு அதிகாரம் இல்லாதது போல் தீர்ப்பு அமைந்தது.

அந்தத் தீர்ப்பையும் இப்பொழுது உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு ஐந்து நீதிபதிகள் கொண்ட அந்த அமர்வு இந்தியா முழுவதும் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசின் கட்சியை சாராத அரசுகள் செயல்படுகிற மாநிலங்களில் ஆளுநர்களின் அதிகார வரம்பு மீறிய செயல் இதையெல்லாம் தடுக்கின்ற விதத்தில் கடிவாளம் அமைக்கின்ற விதத்தில் புதுடெல்லியில் 2019 அறிவித்த அந்த தீர்ப்பு ஏற்க முடியாது என்றும் மாநில அரசுகளின் நிர்வாகத்தை ஒன்றிய அரசு எடுத்துக் கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்தும் மாநில ஆளுநர்கள் மாநில அமைச்சரவையில் முடிவுகளுக்கு கட்டுப்பட்டவர்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சட்டம் இயற்றுவதற்கு தான் சட்டமன்றம். அந்த சட்டமன்றம் இயற்றும் அதிகாரத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டியது ஆளுநர் அவர்களின் கடமை மக்களின் விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டமியற்றதான் சட்டப்பேரவை அமைக்கப்படுகிறது அதற்கு ஆளுநர்கள் மதிப்பு அளிக்க வேண்டும்.

டெல்லி விவகாரத்தில் ஜனநாயகம் குறித்து அரசியல் சாசனத்தில் பல்வேறு அம்சங்களை தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டி உள்ள அரசியல் சாசன அமர்வு ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்பு ஜனநாயகமும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் உள்ள உரிமைகள் ஆளுநர்களின் எந்த அளவுக்கு அவர்கள் அரசோடு இணைந்து போக வேண்டும்.

மக்களின் பிரதிநிதிகள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை மதிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருப்பது மாநில அரசுகளின் மக்களாட்சி தத்துவத்திற்கு கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகும் இந்த சூழ்நிலையில் தொடர்ந்து மதிக்காமல் ஒன்றிய அரசின் போக்குக்கு ஏற்ப ஆளுநர்கள் செயல்பட்டால் மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பை அமல்படுத்த மறுப்பதாக குற்றம் சாட்டி உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசு மீது அவமதிப்பு வழக்குகள் தொடுக்க வேண்டிய சூழ்நிலை வரும்.

தற்போது டெல்லி அரசு அவமதிப்பு வழக்கு ஒன்று தொடர்ந்தது. அந்த மாநிலத்தில் டெல்லி அரசின் அதிகாரிகள் செயலாளர் மாற்றம் தொடர்பான நிர்வாக ஒப்புதல் வழங்க ஒன்றிய அரசு மறுக்கிறது. இது எங்கள் நடவடிக்கைக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. இது உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிரானது மட்டுமன்றி அதை அவமதிக்கும் செயலாகும்.

எனவே டெல்லி அரசு பிறப்பித்த உத்தரவுகளை செயல்படுத்த அனுமதி வழங்க வேண்டும் . அதே வேளையில் எங்களின் நடவடிக்கைகளுக்கு தடையாக இருக்கும் ஒன்றிய அரசுக்கு உச்ச நீதிமன்றம் ஒரு வழிகாட்டுதல் உத்தரவை பிறப்பிக்க வேண்டும். ஆளுநர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் மாநில அரசுகள் கொண்டு வருகிற சட்ட திருத்தங்கள், சட்ட முன்வடிவங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் கையெழுத்து கொண்டு அதை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அதற்கு ஒரு கால நிர்ணயம் உச்சநீதிமன்றம் நியமித்து அதற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என வழக்கு தொடர்ந்துள்ளது. இது குறித்து தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அனைத்து மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மனுவை உச்ச நீதிமன்றம் அவசர வழக்காக எடுத்து விசாரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது . உச்ச நீதிமன்றம் உறுதியான ஒரு அரசியல் சாசன பெஞ்ச் தீர்ப்பு கூறியும் அதை அமல்படுத்தாமல் ஊதாச்சினப்படுத்தும் ஒன்றிய அரசின் செயல்கள் ஜனநாயக மரபு விரோதமாக இருக்கிறது.

ஒன்றிய அரசு நீதிமன்றத்தில் அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பை ஏற்று முழுமையாக அதை பின்பற்றி மாநில ஆளுநர்களுக்கு சில உத்தரவுகளை பிறப்பித்து மாநில அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சட்ட மசோதாக்களை அனுப்பினால் உடனடியாக நிறை வேற்றிக் கொடுப்பதற்கும் மாநில அரசுகளின் உரிமைகளில் தலையிடாமல் அரசோடு ஒத்துழைத்து செயல்படுவதும் ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை ஆளுநராக வருபவர்கள் அவர்களுடைய அரசியல் சாசன நிலைப்பாட்டில் செயல்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு இடையூறு இல்லாமல் செயல்படுவது தான் ஜனநாயகப் பண்பாடு அந்த அடிப்படையில் இந்த தீர்ப்பை ஏற்றுக்கொண்டு அதன் வழியில் செயல்பட முன் வந்தால் மட்டுமே பா.ஜ.க. மீதான நம்பகத்தன்மை கூடும் இல்லை என்றால் ஒன்றிய அரசின் சர்வாதிகார போக்கு பழிவாங்கும் வேலைகளை செயல்பாடுகளை எதிர்த்து மீண்டும் மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்த வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தை நாட வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

அந்த நிலையில் தான் இப்பொழுது டெல்லி மாநில அரசு உச்சநீதிமன்றத்திற்கு சென்று இருக்கிறது. அரசியல் களத்தில் இறங்கி ஒரு அரசியல் கட்சிக்குள்ளேயோ பல அரசியல் கட்சிகளுக்கு இடையே ஏற்படும் பிரச்சனைகளை ஆளுநர்கள் தீர்த்து வைப்பதற்கு அரசியல் சாசனமோ அல்லது சட்டமோ எந்த அதிகாரத்தையும் வழங்கவில்லை என உச்ச நீதிமன்றம் சிறப்பான தீர்ப்பை கூறியுள்ளது.

காரணம் தமிழ்நாடு ஆளுநர்அவர்கள், சில மாநில ஆளுநர்கள் மாநில ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர்களை போல் கருத்துக்கள் சொல்லுவதும் செயல்படுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது . அரசியல் சாசன சட்டத்தில் ஆளுநர்கள் அரசியல் கட்சிகளை நடத்துகிற தலைவர்கள் போல் செயல்பட கூடாது என்பதுதான்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஏற்று வழி நடத்தாமல் ஒன்றிய அரசு இருந்தால் ஆளுநர்கள் இருந்தால் மேதகு ஜனாதிபதி அவர்கள் உத்தரவு பிறப்பித்து இவர்களை உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஏற்று செயல்பட வைக்க வேண்டும் . அதுவும் நடக்கவில்லை என்றால் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தங்கள் உரிமைகள் என்ற வாக்கின் மூலம் ஜனநாயகத்தின் மீது நாட்டு மக்கள் நாடு முன்னேற்றம் அடைய மாநில அரசுகளின் அதிகாரத்தில் ஒன்றிய அரசுகள் தலையிடாமல் இருக்க மக்களாட்சி தத்துவத்தை, ஜனநாயகத்தை கட்டி காக்க

வாக்களிக்கிற உரிமை மூலம் ஒட்டுமொத்த இந்தியாவில் வாழுகிற அத்தனை மக்களும் படித்தவர்கள், பண்பாளர்கள் குறிப்பாக 55 சதவீத வாக்காளர்களாக உள்ள இளைஞர்கள் தங்கள் வாக்கின் மூலம் உரிமையை நிலைநாட்டி கூட்டாட்சி தத்துவத்தை மாநில கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியாவை காப்பாற்றுகின்ற உரிமையை கொடுப்பார்கள்.

நிச்சயம் அது நடக்கும். இப்பொழுது சர்வாதிகாரப் போக்கோடு, ஆணவப் போக்கோடு அகம்பாவத்தோடு எடுத்தேன் - கவிழ்த்தேன் என்கிற நிலைப்பாட்டோடு இருக்கிற பி.ஜே.பி. அரசு செயல்பட்டு கொண்டிருப்பதற்கு விரைவில் ஒரு நல்ல முடிவாக மக்கள் செயல்படுவார்கள்.